**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 116/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா. 5 |
| Name : | திரு. கலையரசன் |
| Father's Name/Husband Name: | திரு. கனகராஜ் |
| Village : | மருதடி |
| Taluk : | ஆலத்தூர் |
| Age : | 27 / 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 30.10.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1,2 ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது )**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுநராக பணி புரிகிறேன். அ.சா.1 விஜயலெட்சுமியை தெரியும். எதிரிகள் ஆறுமுகம் மற்றும் மல்லிகா ஆகியோர்களை தெரியும். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு இரவு சுமார் 7 மணியளவில் அ.சா.1 தரப்பினருக்கும், எதிரிகள் தரப்பினருக்கும் தகராறு ஏற்பட்டு அடிதடி சண்டையாகிவிட்டது என நான் கேள்விப்பட்டேன். ஆம்புலன்ஸ் வரும்போது தான் சம்பவ இடம் சென்று பார்த்தேன். நான் சென்று பார்த்த போது விஜயலெட்சுமிக்கு காரை எலும்பில் அடிப்பட்டிருந்தது. அதன்பிறகு ஆம்புலன்சு மூலமாக விஜயலெட்சுமியை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். எதிரி ஆறுமுகத்தின் குடும்பத்தினர் கல் எடுத்து எறிந்ததனால் விஜயலெட்சுமிக்கு காயம் ஏற்பட்டதாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் எங்கள் வீட்டிலிருந்து இரண்டு வீடு தள்ளி குடியிருக்கிறார்கள். போலிசார் என்னை விசாரித்தனர் என்றும், கடந்த 07.08.2022 அன்று இரவு சுமார் 7 மணியளவில் அ.சா.1 விஜயலெட்சுமி மற்றும் அவரது மகன்கள் எதிரிகளின் வீட்டிற்கு சென்று அவர்களது மகள் தமிழரசியை கண்டித்து வைக்குமாறு சொல்லிக் கொண்டிருக்கும்போது, எதிரி ஆறுமுகம் கல்லால் விஜயலெட்சுமியின் வலது காரை எலும்பில் அடித்தார் என்றும், எதிரி மல்லிகா கல்லை விஜயலெட்சுமியின் மீது வீசினார் என்றும், அதனால் விஜயலெட்சுமிக்கு வலது கை மற்றும் தோள் பட்டையில் காயம் ஏற்பட்டது என்றும், எதிரிகள் அ.சா.1யை கொலைமிரட்டல் விடுத்தார் என்றும், இந்த சம்பவம் எனக்கு நேரடியாக தெரியும் என்றும் அதற்கு ஆதரவாக வாக்குமூலம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எங்கள் வீட்டிற்கு அருகே குடியிருப்பதால் அவர்கள் கேட்டுக் கொண்டதன்பேரில் எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.